**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : – திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24–ஆம் தேதி திங்கட்கிழமை**

**இ.ம.எண்.10/2025 இன் அ.வ.எண்.96/2013**

1. கருப்பாயி (இறந்தார்)
2. சுப்பிரமணியன்
3. சாரதாம்பாள்
4. சக்திவேல் . . . மனுதாரர்கள்/ 1, 3, 4, 5 பிரதிவாதிகள்

/எதிர்/

1. சகுந்தலா (இறந்தார்)
2. கந்தன் (எ) கந்தசாமி
3. மாலதி
4. வெங்கடேசன் . . . எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
5. ராஜம்மாள் . . . எதிர்மனுதாரர்/ இரண்டாவது பிரதிவாதி

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில், கட்டளை 8 விதி 3 (1) எ மற்றும் பிரிவு 151 சி.பி.சி.–ன் படி, மனுவில் கண்ட ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து ஏற்றுக்கொண்டு உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 13.08.2025 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 14.11.2025 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 24.11.2025 |
| மனுதாரர்களுக்காக | : | திரு.R.கிருஷ்ணசாமி – வழக்கறிஞர் |
| முதல் எதிர்மனுதாரர் | : | இறந்துவிட்டார் |
| இரண்டு முதல் நான்கு எதிர்மனுதாரர்களுக்காக | : | திரு.B.K.மலர்கண்ணன் – வழக்கறிஞர் |
| ஐந்தாவது எதிர்மனுதாரர் | : | அசல் வழக்கில் தோன்றா தரப்பினர் |

**1) மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் மூன்றாவது பிரதிவாதி. அசல் வழக்கானது மனுதாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுவில் கண்ட ஆவணங்கள் மேற்படி வழக்கிற்கு மிகவும் முக்கியமானது. மேற்படி ஆவணங்களை பீரோவில் வைத்திருந்ததால், உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை. எனவே, மனுவில் கண்டுள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து ஏற்றுக்கொண்டு உத்தரவிடக் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) இரண்டாவது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, மூன்று, நான்கு எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. மனுவில் ஆதரவுகள் விபரத்தில் 1-வது ஆதரவாக குறிப்பிட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள இந்த எதிர்மனுதாரர்கள் வன்மையாக மறுக்கிறார்கள். 10.07.2000-ல் ராஜலிங்கம், கருப்பாயி அம்மாள், சுப்பிரமணி ஆகியோர்களுக்கு முதல் வாதி சகுந்தலா எழுதிக்கொடுத்த பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் போலியானது, மோசடியானது. அதுபோல் எந்த பத்திரமும் எழுதிக்கொடுக்கவில்லை. 2 முதல் 17 வரையுள்ள ஆவணங்கள் யாவும் அரசாங்கத்தை ஏமாற்றி ஏற்படுத்திக்கொண்ட ஆதரவுகள் ஆகும். மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ள எவ்வித முகாந்திரமும் இல்லை. எனவே, மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4) தீர்வு :–**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் மூன்றாவது பிரதிவாதி. அசல் வழக்கானது மனுதாரர்கள் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுவில் கண்ட ஆவணம் மேற்படி வழக்கிற்கு மிகவும் முக்கியமானது. மேற்படி ஆவணங்களை பீரோவில் வைத்திருந்ததால், உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை. எனவே, மனுவில் கண்டுள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததை மன்னித்து ஏற்றுக்கொண்டு உத்தரவிடக் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை ஆட்சேபனை செய்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்வதாலேயே மேற்படி ஆவணத்திற்கு எவ்வித சட்ட வலுவும் ஏற்படபோவதில்லை. மாறாக, மனுதாரர்களுக்கு அசல் வழக்கினை எதிர்கொள்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகும். மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், நம்பதகுந்ததாகவும் உள்ளது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை. இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

5) **முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
DN: cn=MUTHUSAMY ESWARAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.24 18:21:43 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர்கள்  தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
DN: cn=MUTHUSAMY ESWARAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.24 18:21:49 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**IA No.10/2025 in OS No.96/2013**

**Fair  /  Draft Order**